## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 90/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. ஆதிமூலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரிகள் ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.11.2017 ஆம் தேதி எஸ்.எஸ்.ஐ மணிவண்ணன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு 08.30 சென்று சிகிச்சையிலிருந்த முனைஞ்சிப்பட்டியைச்சேர்ந்த ஒட்டக்காரன் மகன் ஓட்டக்காரன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் 10.00 மணிக்கு வநத அதன் தன்மைகேற்ப குற்ற எண். 148/2017 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் கதிரேசன் அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 01.11.2017 ஆம் தேதி 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று

சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் மூர்த்தி, ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் ஒட்டக்காரன், சந்தானம், வேலு, லெட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.6** ஆகும்.

எதிரிகள் திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பின் வெளியே சென்றுள்ளார்கள்.

புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.06 17:32:25 +0530